OS: 524/2018

Date: 21.01.2026

பெயர் : கோவிந்தன் **(பி.வா.சா.1) ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி :–**

1. 1ம் பிரதிவாதியான நாராயணசாமியின் மகள் வேல்விழி தான் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார் என்றால் ஆமாம். 2ம் பிரதிவாதியான ராஜம்மாள் என்பவர் நாராயணசாமியின் மனைவி என்றால் ஆமாம். சக்தி சிவவேலன் நாராயணசாமியின் மகன் என்றால் ஆமாம். வழக்கு சொத்து காமலாபுரம் கிராமத்தில் இருக்கிறது என்றால் ஆமாம்.

2. நாராயணசாமியின் தகப்பனாரான கோவிந்தன் என்பவருக்கு தாவா சொத்துக்கள் பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அவர் கிரையமும் வாங்கியிருக்கிறார். கோவிந்தனுக்கு எந்தெந்த சொத்துக்கள் பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்பதையும், எந்தெந்த சொத்துக்கள் கிரைய வகையில் பாத்தியப்பட்டது என்பதையும் என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் ஆவணங்களை பார்த்து தான் சொல்லமுடியும். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், தாவா சொத்துக்கள் அனைத்தும் கோவிந்தனுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றாலும் சரியல்ல.

3. நான் கொடுத்த தகவலின் அடிப்படையில் தான் வழக்கறிஞர் பதில் தாக்கல் செய்தார் என்றால் ஆமாம். நான் கொடுத்த பதிலில் கோவிந்தன் கிரையம் வாங்கிய சொத்தும், தாவா சொத்தில் இருக்கிறது என்று குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேனா என்றால் ஆமாம். கோவிந்தன் கிரையம் பெற்ற சொத்தின் கிரயப்பத்திரத்தை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் ஆமாம். கோவிந்தனுக்கு பன்னீர்செல்வம், ராஜா, நாராயணசாமி

என்ற மூன்று மகன்களும், மற்றும் மூன்று பெண் மக்களும் இருந்தனர் என்றால் ஆமாம்.

4. கோவிந்தன் 1988ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் இறந்தது தெரியும் ஆனால் எந்த வருடம் இறந்தார் என்று தெரியாது. கோவிந்தன் இறந்த பின்னர் கோவிந்தனின் மூன்று மகன்களும் கோவிந்தனுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் ஆமாம்.

5. அந்த வகையில் 1ம் பிரதிவாதிக்கு பிரிந்த சொத்துக்களின்பேரில் தான் அவரது மகள் வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் ஆமாம். நாராயணசாமி பரம்பரை சொத்தில் வந்த வருமானத்தில் அவரது மனைவி பெயரில் 1994ம் ஆண்டு ஒரு சொத்து விலைக்கு வாங்கினார் என்றால் ஆமாம்.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

(ஒப்பம்/–த.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.